நாள் 21.07.2025

அசல் வழக்கு எண் 62/2023

வா சா 1 முகம்மதுயாசன்

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வழக்கு சொத்தானது எனக்கு அடவோலை தருவதற்கு முன்பாக என் தாயார் பெயருக்கு அடவோலை தரப்பட்டது என்றால் சரிதான். என்னுடைய தாயார் பெயரில் உள்ள அடவோலையை நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்தேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என்னுடைய தாயார் காதர்பாத்திமா, தங்கவேலு என்பவரிடமிருந்து 20.11.1985 தேதியிட்ட கிரையத்தின் மூலம தான் பாத்தியம் என்றால் சரிதான்.

மேற்படி கிரையபத்திரத்தின் படி எனக்கு 3 செண்ட் தான் பாத்தியம் என்றால் சரியல்ல. எனக்கு 3.96 செண்ட் பாத்தியம் உண்டு. எனக்கு எழுதபடிக்க தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் 3 செண்ட் நிலம் என் தாயாருக்கு பாத்தியம் உள்ளது என்றாலும், நான் எனகது 3.96 செண்ட் பாத்தியம் என பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள எல்கை விவரங்கள் சரி என்றால் சரிதான். வழகது சொத்து காலியிடம் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் சர்வே எண்.7/3 என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்ணின் மொத்த விஸ்தீரணம் என்ன என்றால் 3.96 செண்ட் ஆகும்.

என் இடத்திற்கு மேற்கு பக்கம் பிரதிவாதியின் இடம் உள்ளது என்றால் சரியல்ல. எனக்கும் பிரதிவாதிக்கும் இதே நீதிமன்றத்தில் வேறு வழக்கு நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி வழக்கு எண்.238/2008 இவ்வழக்கு பிரதிவாதிகள் மீது தொடரப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எனக்கு

எதிராக தீர்ப்பாகியுள்ளது என்றால் சரிதான். அதை எதிர்த்து நான் மேல்முறையீட்டு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கிலும் எனக்கு எதிராக தீர்ப்பாகியுள்ளது என்றால் சரிதான்.

நான் தற்போது தாக்கல் செய்துள்ள வழக்கின் சொத்தும் மேல் குறிப்பிட்ட வழக்கு சொத்தும் ஒன்று தான் என்றால் சரிதான். மேற் சொன்ன வழக்கின் பிரதிவாதியும் இவ்வழக்கு பிரதிவாதியும் ஒன்று என்றால் சரிதான். மேல்முறையிட்டு வழக்கில் எனக்கு எதிராக ஏற்பட்ட தீர்ப்பிற்கு மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி மேல்முறையீட்டு வழக்கு தீர்ப்பில் எனக்கு 3 செண்ட் பாத்தியம் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர்கள் பார்க்காமல் எனக்கு 3 செண்ட் பாத்தியம் என்று கூறியுள்ளார்கள். எனக்கு 3.96 செண்ட் பாத்தியம்.

மேற்படி அ.வ.எண்.238/2008 ல் திரு. ஜீயர்மடமும் ஒரு தரப்பினர் என்றால் சரிதான்.

வா.சா.1ற்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுகிணங்க வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

MANJULA C

Digitally signed by MANJULA C
Date: 2025.07.25 10:49:12 +0530